**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : நாராயணசாமி**

**தேதி : 07.05.2026 – வியாழக்கிழமை நேரம் : மாலை 6.10 மணி**

---

*தலைப்புச் செய்திகள்*

ஆப்ரேஷன் சிந்தூரின் முதலாமாண்டு நிறைவை முன்னிட்டு குடியரசு தலைவர், பிரதமர் உள்ளிட்ட தலைவர்கள், பாதுகாப்பு படை வீரர்களுக்கு நாடு தலைவணங்குவதாக கூறியுள்ளனர்.

தொழிலாளர்கள் நலனுக்காக மத்திய அரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருவதாக மத்திய தொழில்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

மேற்கு வங்கத்தில் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட பிஜேபி அரசின் பதவியேற்பு விழா வரும் சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

அஸாம், மேற்கு வங்கம், தமிழகம், கேரளம், புதுச்சேரி மற்றும் சட்டமன்ற இடைத்தேர்தல்கள் நடைபெற்ற மாநிலங்களில் நடத்தை விதிகள் நீக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

*ஆப்ரேஷன் சிந்தூர்-1 (08)*

பயங்கரவாதம் மற்றும் நாட்டு மக்களின் பாதுகாப்பை அச்சுறுத்தும் அனைத்து சக்திகளுக்கும் எதிரான இந்தியாவின் அசைக்க முடியாத உறுதிப்பாட்டிற்கு ஆப்ரேஷன் சிந்தூர் ஒரு சான்றாகும் என்று குடியரசு

தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார். ஆப்ரேஷன் சிந்தூரின் முதலாமாண்டு நிறைவை முன்னிட்டு அவர் வெளியிட்டுள்ள சமூக ஊடகப்பதிவில் இந்தப் பணியில் அசாதாரண வெற்றி நமது ஆயுதப்படைகளின் ஈடு இணையற்ற தைரியத்தையும் உறுதியையும் பிரதிபலிக்கிறது என்று குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்த கூடுதல் தகவல்கள்... **(வாய்ஸ்)**

*ஆப்ரேஷன் சிந்தூர் - 2 வாய்ஸ் (15)*

**(வாய்ஸ்)**

பஹல்காமில் நடைபெற்ற கொடூரமான தாக்குதல் மிக துல்லியமாக எதிர்கொள்ளப்பட்டது என்றும், நாட்டை அச்சுறுத்த முயல்பவர்கள் நமது தேசம் ஒற்றுமையுடனும், வலிமையுடனும் பதிலடி கொடுக்கத் தயாராக உள்ளது என்பதை அறிந்து கொள்ள வேண்டும் என்றும் குடியரசு தலைவர் வலியுறுத்தினார். நமது வீரர்களின் துணிச்சல், தியாகம் மற்றும் தேசப்பற்றுக்கு இன்று நாடு வணக்கம் செலுத்துவதாக திருமதி திரௌபதி முர்மு கூறினார்.

இந்தியாவின் அமைதி, ஒற்றுமை மற்றும் இறையாண்மையை சீர்குலைக்க முயற்சிக்கும் பயங்கரவாத சக்திகள் மற்றும் அவற்றிற்கு ஆதரவளிக்கும் நாடுகளுக்கு உறுதியாக பதிலடி கொடுக்க வரையறுக்கப்பட்ட தருணம் இது என்று குடியரசு துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார். நாட்டின் ஆயுதப்படைகளின் அசைக்க முடியாத தைரியம், வீரம் மற்றும் பயங்கரவாத வலைப் பின்னல்களை திறம்பட குறிவைத்து தகர்த்தெறியப்படுவதை உறுதி செய்தது என்று அவர் தமது சமூக ஊடகப்பதிவில் தெரிவித்துள்ளார்.

*ஆப்ரேஷன் சிந்தூர் - 3 வாய்ஸ் (13)*

ஆப்ரேஷன் சிந்தூரின் ஓராண்டு நிறைவை முன்னிட்டு மக்களவை சபாநாயகர் திரு. ஓம் பிர்லா கூறுகையில், ஆப்ரேஷன் சிந்தூர் பயங்கரவராத்திற்கு எதிரான துணிச்சலான மற்றும் ஆக்கப்பூர்வமான பதிலடி என்றும், ராணுவத்தின் இந்த நடவடிக்கை பாதுகாப்புத்துறையில் உள்நாட்டுத் தொழில்நுட்பம் மற்றும் தன்னம்பிக்கையை எடுத்துக்காட்டுகிறது என்றும் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத்தை முறியடிப்பதற்கும், அதன் செயல்பாட்டுச் சூழலை அகற்றுவதற்கும் நாடு உறுதியாக உள்ளது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார். ஆப்ரேஷன் சிந்தூரின் ஓராண்டு நிறைவையொட்டி பிரதமர் வெளியிட்டுள்ள சமூக ஊடகப்பதிவில், ஆயுதப்படைகளின் ஈடுஇணையற்ற தைரியம், துல்லியம் மற்றும் உறுதியை ஆப்ரேஷன் சிந்தூர் வெளிப்படுத்தியுள்ளது என்றும், பஹல்காமில் பொதுமக்கள் தாக்கப்பட்டதற்கு, பாதுகாப்பு படைகள் கொடுத்த பதிலடிக்கு தேசம் வணக்கம் செலுத்துவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

*ஆப்ரேஷன் சிந்தூர் - 4 (15)*

இந்நாளையொட்டி பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஆப்ரேஷன் சிந்தூர் நவீன ராணுவ நடவடிக்கைகளுக்கான எடுத்துக்காட்டாக விளங்குகிறது என்றும் பாதுகாப்பு படையினரின் துணிச்சலையும், தியாகத்தையும் நாடு போற்றுகிறது என்றும் கூறியுள்ளார்.

ஆப்ரேஷன் சிந்தூர் இந்தியாவின் சகாப்த இயக்கமாக நிற்கிறது என்றும், இது ஆயுதப்படைகளின் தாக்குதல் சக்தியை நாட்டின் எதிரிகளுக்கு எப்போதும் நினைவூட்டும் என்றும் மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா கூறியுள்ளார். ஆப்ரேஷன் சிந்தூரின் ஓராண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் அவர் வெளியிட்டுள்ள சமூக ஊடகப்பதிவில், நாட்டின் பாதுகாப்பு படைகளின் இணையற்ற வீரத்திற்கு தாம் வணக்கம் செலுத்துவதாகவும், எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை

அழிக்க ஒன்றிணைந்து செயல்படும் உறுதியான அரசியல் நிலைப்பாடு ஆகியவற்றை நினைவில் கொள்ளும் நாளாக இந்நாள் திகழ்கிறது என்றும், குறிப்பிட்டுள்ளார்.

*பீகார் (17)*

பீகார் முதலமைச்சர் திரு. சம்ராட் சௌத்ரி தலைமையிலான அமைச்சரவை இன்று விரிவாக்கப்பட்டது. பாட்னாவில் உள்ள காந்தி மைதானத்தில் நடைபெற்ற பிரம்மாண்டமான விழாவில், ஆளுநர் லெப்டினன்ட் ஜெனரல் சையத் அதா ஹஸ்னைன், புதிதாக நியமிக்கப்பட்ட முப்பத்திரண்டு அமைச்சர்களுக்குப் பதவிப்பிரமாணம் மற்றும் ரகசியக் காப்புப் பிரமாணத்தை செய்து வைத்தார். திரு. விஜய் குமார் சௌத்ரி மற்றும் திரு. பிஜேந்திர பிரசாத் யாதவ் ஆகியோர் சாம்ராட் சௌத்ரியுடன் ஏப்ரல் மாதம் பதவியேற்று துணை முதலமைச்சர்களாக நியமிக்கப்பட்டனர். 243 உறுப்பினர்களைக் கொண்ட சட்டமன்றத்தில் 89 சட்டமன்ற உறுப்பினர்களுடன் பிஜேபி தனிப்பெரும் கட்சியாக உள்ளது. இவ்விழாவில் பிரதமர் திரு. நரேந்திர மோடி, மத்திய அமைச்சர்கள் திரு.ராஜ்நாத் சிங், திரு. அமித்ஷா, திரு. ஜே.பி. நட்டா உள்ளிட்ட பல்வேறு உறுப்பிர்கள் கலந்து கொண்டனர்கள். மேலும், பிஜேபி தேசியத் தலைவர் திரு. நிதின் நவீன் மற்றும் ஜேடியு தேசிய தலைவர் திரு. நிதிஷ் குமார் மற்றும் தேசிய ஜனநாயக கூட்டணியின் மூத்த தலைவர்கள் இந்த பதவியேற்பு விழாவில் பங்கேற்றனர்.

*மன்சுக் – (10)*

தொழிலாளர்கள் நலனுக்காக மத்திய அரசு கடந்த 12 ஆண்டுகளாக பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது என்று மத்திய தொழில்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார். இன்று புதுடெல்லியில் 40 வயதுக்கு மேற்பட்ட தொழிலாளர்களுக்கு

ஆண்டுதோறும் இலவச உடல் பரிசோதனை செய்துகொள்வதற்கான தேசிய இயக்கத்தை தொடக்கி வைத்துப் பேசிய அவர், மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக வேலை வாய்ப்பின்மை 3.2 சதவிகிதம் குறைந்துள்ளது என்றும் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதோடு மட்டுமின்றி தொழிலாளர்களின் சமூக பாதுகாப்பை உறுதி செய்வதிலும் மத்திய அரசு கவனம் செலுத்தி வருவதாக கூறினார்.

*கேரளம் (10)*

கேரளத்தில் புதிய அரசு அமைப்பதற்கான நடவடிக்கைகளில் காங்கிரஸ் ஈடுபட்டுள்ளது. 140 உறுப்பினர்களைக் கொண்ட கேரள சட்டப்பேரவைக்கு நடைபெற்ற தேர்தலில் காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி 102 தொகுதிகளில் வெற்றி பெற்றது. புதிய அரசு அமைப்பது குறித்து கூட்டணி கட்சிகளுடன் ஆலோசனைகள் நடைபெற்று வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. மேலும், தமிழக ஆளுநராக பொறுப்பு வகிக்கும் கேரள ஆளுநர் திரு. ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் சென்னையிலிருந்து திருவனந்தபுரம் திரும்பியவுடன் காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி, புதிய அரசு அமைப்பதற்கான உரிமை கோரவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

*மேற்கு வங்கம் -1 (04)*

மேற்கு வங்கத்தில் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட பிஜேபி அரசின் பதவியேற்பு விழா ரவீந்திர ஜெயந்தியை முன்னிட்டு சனிக்கிழமையன்று கொல்கத்தாவிலுள்ள பிரிகேட் பரேட் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இது குறித்த கூடுதல் தகவல்கள் … (வாய்ஸ்)

*மேற்கு வங்கம் -2 வாய்ஸ் (10)*

**(வாய்ஸ்)**

மேற்கு வங்க மாநில பாஜக தலைவர் திரு. ஷாமிக் பட்டாச்சார்யா விழாவிற்கான ஏற்பாடுகள் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து மூத்த அதிகாரிகளை மாநில தலைமைச் செயலத்தில் சந்தித்துப் பேசினார். சனிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ள இந்த பதவியேற்பு விழாவில் பிரதமர் திரு. நரேந்திர மோடி, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா மற்றும் பிஜேபி ஆளும் மாநிலங்களைச் சேர்ந்த முதலமைச்சர்களும் பங்கேற்கவுள்ளனர். இதற்கிடையே விழா நடைபெறும் இடத்தைச் சுற்றி சுமார் 4 ஆயிரம் காவலர்கள் பணியில் ஈடுபடுத்தப்படுவார்கள் என்றும், உயரமான கட்டிடங்களிலிருந்தும் கண்காணிப்பு மேற்கொள்ளப்படும் என்றும் திரு. பட்டாச்சார்யா கூறியுள்ளார்.

*தமிழகம் (08)*

தமிழகத்தில் நிலவும் தெளிவற்ற அரசியல் சூழலில் புதிய அரசை அமைப்பதற்கான பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன. இது தொடர்பாக தமிழக ஆளுநர் திரு. ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர், தவெக தலைவர் திரு. விஜய்-யை இன்று லோக் பவனில் சந்திக்க அழைப்பு விடுத்தார். இந்த சந்திப்பின்போது அரசை அமைப்பதற்கு, தமிழக சட்டமன்றத்தில் தேவைப்படும் பெரும்பான்மை ஆதரவு இன்னும் பெறப்படவில்லை என்று ஆளுநர் விளக்கியதாக லோக் பவன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது,

*புதுச்சேரி (12)*

புதுச்சேரி முதலமைச்சர் திரு. ரங்கசாமி தனது பதவியை ராஜிநாமா செய்தார். நடந்து முடிந்த சட்டமன்ற தேர்தலில் என்.ஆர். காங்கிரஸ் தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றி பெற்றதை தொடர்ந்து 15ஆவது சட்டப்பேரவை கலைக்கப்பட்டு புதிய 30 சட்டமன்ற உறுப்பினர்களின் பட்டியல் அரசிதழில் வெளியிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து முதலமைச்சர் திரு. ரங்கசாமி இன்று காலை துணைநிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதனை சந்தித்து தனது ராஜிநாமா கடிதத்தை அளித்தார். புதிய அரசு அமையும் வரை காபந்து முதலமைச்சராக இருக்கும்படி ஆளுநர் கேட்டுக்கொண்டார். தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய திரு. ரங்கசாமி, விரைவில் புதிய அரசு பதவியேற்கும் என்றும் தேசிய ஜனநாயக கூட்டணியின் கூட்டம் முடிந்த பின் ஆட்சியமைக்க உரிமை கோரும் கடிதம் கொடுக்கவுள்ளதாகவும் கூறினார்.

*தேர்தல் ஆணையம் (12)*

அஸாம், மேற்கு வங்கம், தமிழ்நாடு, கேரளம், புதுச்சேரி மற்றும் சட்டமன்ற இடைத்தேர்தல்கள் நடைபெற்ற மாநிலங்களில் நடைமுறையில் இருந்த மாதிரி நடத்தை விதிகள் நீக்கப்பட்டுள்ளன என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. இந்த மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டதால் இந்த மாதிரி நடத்தை விதிகள் செயல்படுவதை நிறுத்தி விட்டது என்று தேர்தல் ஆணையம், மத்திய அமைச்சரவை செயலாளர், மாநில தலைமைச் செயலாளர்கள் மற்றும் தலைமை தேர்தல் அதிகாரிகளுக்கு கடிதம் அனுப்பியுள்ளது. எனினும் மேற்கு வங்கத்திலுள்ள Falta சட்டமன்ற தொகுதியின் வரும் 21ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெறவுள்ளதால் அந்த தொகுதியில் மட்டும் மாதிரி நடத்தை விதிகள் தொடர்ந்து நடைமுறையில் இருக்கும் என்றும் ஆணையம் தெரிவித்துள்ளது.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

ஆப்ரேஷன் சிந்தூரின் முதலாமாண்டு நிறைவை முன்னிட்டு குடியரசு தலைவர், பிரதமர் உள்ளிட்ட தலைவர்கள், பாதுகாப்பு படை வீரர்களுக்கு நாடு தலைவணங்குவதாக கூறியுள்ளனர்.

தொழிலாளர்கள் நலனுக்காக மத்திய அரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருவதாக மத்திய தொழில்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

மேற்கு வங்கத்தில் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட பிஜேபி அரசின் பதவியேற்பு விழா வரும் சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

அஸாம், மேற்கு வங்கம், தமிழகம், கேரளம், புதுச்சேரி மற்றும் சட்டமன்ற இடைத்தேர்தல்கள் நடைபெற்ற மாநிலங்களில் நடத்தை விதிகள் நீக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

**இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது. AV / CN / VM**